(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1 (1).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 சனவரி 09 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 சனவரி 21, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(3) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 06 ஆம் திகதிய 2152/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— சேர் பெறுமதி வரி சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 நவம்பர் 29 ஆம் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2020.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— சேர் பெறுமதி வரி சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 06 ஆம் திகதிய 2152/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2020.01.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2020 பெப்ரவரி 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2020

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்முயற்சி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்" பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி சங்கத்தின் உத்தியோகத்தர் குழாத்தின் பதவிகளும் அப் பதவிகளை வகிக்கும் ஆட்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இச் சங்கத்தை பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கை சட்டரீதியற்றதென்பதையும்;

(ii) கூட்டுறவுச் சங்கமொன்றை பதிவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய எவ்வித காரணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இது தொடர்பாக முறையான சங்கப் பதிவு கோப்பொன்று திணைக்களத்தில் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

49/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஊவா மாகணத்தில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாணவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஊவா மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், புலமைப் பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மற்றும் அந்த புலமைப் பரிசில்களின் நிதிசார் பெறுமதி ஆகிய தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

77/2020

கௌரவ ஹேஷா விதானகே,— தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வானொலி அலைவரிசைகளை பேணிவருகின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி வானொலி அலைவரிசைகளின் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

(iv) இன்றளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பு மேற்கொள்ளப் பட்டுவராத வானொலி அலைவரிசைகள் உள்ளனவா,

(v) ஆமெனில், அந்த அலைவரிசைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாது;

(ii) தற்போது மேற்படி வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைசார்ந்த வகையில் இடம்பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) சமூகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஒருசில வானொலி அலைவரிசைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்கள் ஒலிபரப்பப்படுவதை தடுப்பதற்காக வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10/2020

கௌரவ புத்திக பத்திரண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை நாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி சந்தர்ப்பங்களின் போது நீர் தாக்குதல்கள், கண்ணீர் புகை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட தடவைகள் மற்றும் துப்பாக்கி பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை;

(iii) இச் சம்பவங்களில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருடத்திற்கிணங்க வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 ஆம் திகதியிலிருந்து 2017.05.31 ஆம் திகதி வரை சூரியவெவ சர்வதேச கிரிக்கட் மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள கிரிக்கட் போட்டிகள் யாவை என்பதையும்;

(ii) அப் போட்டிகள் மூலம் ஈட்டப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கிரிக்கட் வீரர்களுக்கு தங்குவதற்கு தேவையான நட்சத்திர வகுப்பிலான ஹோட்டல் ஒன்றை இம் மைதானத்துக்கு அண்டியதாக நிர்மாணிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

78/2020

கௌரவ ஹேஷா விதானகே,— தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையையும் பேணிவருகின்ற நிறுவனங்கள் தனித்தனியாக யாது;

(iii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையினதும் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் தற்போது ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்டுவராத தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில் அந்த அலைவரிசைகள் யாவை;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகள் எவரால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன;

(iv) மேற்படி ஒழுங்குமுறைப்படுத்தல் முறைப்படி அமுலாக்கப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(v) ஒருசில அலைவரிசைகள் ஊடாக தீயகருத்துடனும் அவமதிப்பு ஏற்படக்கூடிய வகையிலும் மேற்கொள்ளப்படுகின்ற பாரதூரமான சமூகப் பாதிப்பினைத் தடுப்பதற்காக தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்து வதற்கான துரிதமான முறைசார்ந்த முறையிலொன்றை தயாரிப்பாரா;

(vi) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

103/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பற்கு,— ( 1 )

(அ) 2014 ஆம் ஆண்டில் பதுளை மாவட்டத்தின் மீரியபெத்த மண்சரிவு காரணமாக,

(i) இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) ஊனமுற்றோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(iv) இறந்த ஒருவருக்காக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(v) சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நட்டஈட்டுத்தொகை எவ்வளவு;

(vi) இடம்பெயர்ந்த அனைவருக்கும் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(vii) இடம்பெயர்ந்த குடும்பமொன்றுக்கு நிரந்த வீடொன்றினை வழங்கிய மிகவும் கிட்டிய திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

109/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013, 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 அம் ஆண்டுகளில் சனாதியபதியவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் மேற்படி விஜயங்களின் நோக்கங்கள்;

(ii) ஒவ்வொரு விஜயத்திற்காகவும் பங்கேற்ற ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை;

ஒவ்வோர் ஆண்டுவாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

## 2020 பெப்ரவரி 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/2020

கௌரவ புத்திக பத்திரண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் உள வளர்ச்சி ஔடதங்களின் (உளநோயாளர்களுக்கு வழங்கப்படும் ஔடதம்) தவறான பயன்பாடு பற்றிய தவறுகள் காரணமாக கைதுசெய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) அதிக எண்ணிக்கையான ஆட்கள் கைதுசெய்யப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வருடங்களிலும் உளவளர்ச்சி ஔடதங்கள் தொடர்பிலான தவறுகள் காரணமாக கைதுசெய்யப்பட்டுள்ள அதிகரித்த போக்கானது சனத்தொகையில் ஒரு இலட்சம் மக்களுக்கு எத்தனை பேர்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஔடதங்களை போதைப்பொருளாக பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்திலுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் தேயிலை உர மானியம் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

(iv) இற்றைவரை மேற்படி மானியம் கிடைக்கப் பெறாதவர்கள் இருப்பின் அந்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இவர்களுக்கு விரைவில் இம்மானியத்தை பெற்றுக்கொடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

79/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற சினிமாக் கொட்டகைகள் யாவை;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) இச்சினிமா கொட்டகைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள சினிமாக் கொட்டகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) இச்சினிமா கொட்டகைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது யார்;

(iv) மிகக்குறைந்த வசதிகளுடனும் பலவீனமான செயற்பாட்டுடனும் கூடியதாக நடாத்தப்பட்டு வரும் சினிமாக் கொட்டகைகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், சினிமாக் கொட்டகைகளை முறைசார்ந்ததாக நடாத்திச் செல்வதற்காக, சினிமாக் கொட்டகைகளை ஒழுங்குமுறைப் படுத்தப்படுவதற்கு முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக அமைப்பாரா;

(vi) ஆமெனில் , அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12/2020

கௌரவ புத்திக பத்திரண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கஞ்சா போதைப்பொருள் சார்ந்த தவறுகள் காரணமாக கைதுசெய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) அதிக எண்ணிக்கையிலான ஆட்கள் கைதுசெய்யப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை;

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கஞ்சா தொடர்பிலான தவறுகள் காரணமாக கைது செய்யப்பட்டுள்ள அதிகரித்த போக்கானது சனத்தொகையில் ஒரு இலட்சம் மக்களில் எத்தனை பேர்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சட்டத்துக்கு முரணாக கஞ்சா செய்கை பண்ணப்பட்டுள்ளதாகக் கருத்தப்படுகின்ற மதிப்பீடு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது;

(ii) சட்டத்துக்கு முரணாக வருடமொன்றில் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதாகக் கருதப்படும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கஞ்சாவின் அளவு எத்தனை கிலோ;

(iii) கஞ்சா செய்கைபண்ணப்படல் மற்றும் இறக்குமதியை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(iv) ஆமெனில், குறிப்பிட் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

53/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு கல்விச் சுற்றுலா பற்றி 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு விசாரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ஆ) ஆமெனின், மேற்படி காணக்காய்வு விசாரணைக்கு அமைவாக,

(i) மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உத்தியோகத்தர்களை தெரிவு செய்கின்றபோது பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

80/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் தொலைபேசி வலையமைப்புக்கள் ஊடாக இடம்பெறும் உரையாடல்களை செவிமடுப்பதற்கான அல்லது ஒலிப்பதிவு செய்வதற்கான உபகரணத் தொகுதியொன்றை வெவ்வேறாக அரசாங்கத்தினால் அல்லது ஏதேனுமொரு நிறுவனமொன்றினால் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டோ பொருத்தப்பட்டோ உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி தொகுதியின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகுதி ஊடாக கண்காணிக்கப்படவுள்ள தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவ்வாறான தொகுதியொன்றை இறக்குமதி செய்வதன் நோக்கம் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

104/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டில் கொஸ்கம, சாலாவ இராணுவ ஆயுத களஞ்சியம் வெடித்தமையினால்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உயிரிழந்த ஆளொருவருக்காக அரசாங்கத்தின் சார்பில் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்ட கூடியபட்ச மற்றும் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இடம்பெயர்ந்த சகலருக்கும் நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இடம்பெயர்ந்த குடும்பமொன்றிற்கு நிரந்தர வீடொன்று பெற்றுக் கொடுக்கப்பட்ட அண்மித்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

110/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015.01.09 முதல் 2019.12.31 வரை பிரதமர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள்;

(ii) அவ்விஜயங்களின் நோக்கங்கள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திலும் கலந்து கொண்டவர்களின் எண்ணிகையும் அவர்களது பதவிகளும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம்;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

105/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.12.31 ஆம் திகதியளவில் அரசாங்கத்தின், பத்து இலட்சம் தொழில்வாய்ப்புகள் கருத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

111/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில்,

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானம்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை;

(iv) புகையிரத பயணச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட தொகை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரத பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

(ii) பொதுவாக நாளொன்றில் மேற்கொள்ளப்படும் பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 பெப்ரவரி 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

13/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு வதிவிட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு சேவைகளை வழங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டி மேற்படி அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் புனர்வாழ்வளிப்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) புனர்வாழ்வளிப்பு நிறுவனங்களிலிருந்து வெளியேறுபவர்கள் பற்றி பின்னாய்வை மேற்கொள்ளும் முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

54/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்சமயம் ஊவா மாகாணத்தில் சேவையாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் சேவையாற்றும் இடங்கள் தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) ஊவா மாகாணத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) தற்சமயம் ஊவா மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

81/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் இலங்கை பொலிஸாருக்கு கிடைத்துள்ள பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கு அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்சமயம் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆயுள்வேத ஔடத உற்பத்திக்காக ஆண்டொன்றுக்கு தேவையான கஞ்சாவின் அளவு மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆயுள்வேத ஔடதங்களுக்கு தேவையான கஞ்சா செய்கைபண்ணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், தற்சமயம் கஞ்சா செய்கைபண்ணப்பட்டுள்ள ஏக்கரளவு யாது என்பதையும்:

(iii) இப்பயிர்ச்செய்கையை கண்காணிக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கைப்பற்றப்படுகின்ற கஞ்சா ஆயுள்வேத ஔடதங்களுக்காக பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், 2017 ஆண்டில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் ஆயுள்வேத ஔடத உற்பத்திக்கு எத்தனை பயன்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

55/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வீதிகளின் கிலோமீற்றர் அளவு, ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தரப்படுத்தலுக்கமைய மேற்படி அளவுகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை காப்பட் இடப்பட்ட ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான பதுளை மாவட்டத்தின் வீதிகளின் கிலோமீற்றர் அளவு, வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) ஊவா மாகாண சபைக்கு உரித்தான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பராமரிப்புச் செய்வதற்கும் நிதி ஏற்பாடுகளை வழங்கும் மூலங்கள் யாவை என்பதையும்;

(v) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள மூலங்களின் கீழ் பதுளை மாவட்டத்தின் மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்வதற்குச் செலவிடப்பட்ட பணத்தொகை, ஒவ்வொரு வருடத்துக்கு மற்றும் மூலங்களுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

82/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டுடன் ஆரம்பமான முதலாவது பாராளுமன்றத்திலிருந்து எட்டாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றம் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைகளில் இருந்த அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையானது, குறித்த அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கு ஏற்றவாறு நியாயமான பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் பெண்களுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

106/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை உள்ளிட்டதாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

112/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

107/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017 ஆம் ஆண்டு மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததனால்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை;

(ii) அங்கவீனமுற்றோர்களின் எண்ணிக்கை;

(iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை;

(iv) உயிரிழந்த ஒருவருக்குச் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை;

(v) சேதமடைந்த வீடுகளுக்காகச் செலுத்தப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நட்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இடம்பெயர்ந்த அனைவருக்கும் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இடம்பெயர்ந்த ஒரு குடும்பத்திற்கு நிரந்தர வீடொன்று வழங்கப்பட்ட அண்மித்த திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

113/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi ) எஸ்பெஸ்ரோஸ், பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?